BRAMPTON Flower City
brampton.ca

media release

உடனடி வெளியீட்டுக்க்காக

**சமுதாயப் பாதுகாப்பு மற்றும் குற்றத்தடுப்புக்காக ப்ராம்ப்ட்டன் மாநகரம் பிரதேசரீதியான நிதித்துக்கீட்டை வரவேற்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 24, 2020) – இன்றையதினம், பீல் ரீஜனல் போலீஸ் (Peel Regional Police )-அமைப்புக்காக $20.5 மில்லியன் நிதி வழங்குவதாக ஒன்ட்டேரியோ அரசு வெளியிட்ட அறிவிப்பினை ப்ராம்ப்ட்டன் நகரம் பெரிதும் வரவேற்கிறது; இந்த நிதியானது சமுதாயப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு வலுவூட்டுவதற்கான ஆதாரவசதிகளை அதிகரிக்க உதவும்.

இந்த அறிவிப்பின்போது, பீல் போலீஸ் சர்வீசஸ் போர்ட் (Peel Police Services Board)-இல் தனக்கென ஒரு அமர்வு கொண்டிருக்கும் மாநகரத்தின் மேயர் பேட்ரிக் ப்ரவுன் (Mayor Patrick Brown) அவர்கள் இப்படியான முதலீட்டின் பேரிலான சிறப்பினைப் பற்றி எடுத்துரைத்தார்; இந்த நிதியானது ஒன்ட்டேரியோவின் துப்பாக்கிக் கலாச்சாரம், சமூக விரோதக் கும்பல்கள் மற்றும் வன்முறை வெறியாட்டத்தை ஒடுக்குதலுக்கான யுக்திக்கும், பீல் பிராந்திய போலீஸ்-இனால் முடுக்கிவிடப்பட்ட ”சமுதாயத்தினரையும் ஈடுபடுத்துகின்ற” நிகழ்ச்சித்திட்டத்திற்கும் துணை புரிகிறது.

ப்ராம்ப்ட்டன் நகரமானது, வலுவானதும் பாதுகாப்பானதுமான சமுதாயங்களைக் கட்டமைப்பதில் மிகப்பெரும் கூட்டு வைத்துக்கொள்வது பற்றி எப்போதும் சீராக அறிவுறுத்தி வருகிறது. 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒன்ட்டேரியோவின் நகராட்சிகளுக்கான சங்கத்தின் [Association of Municipalities of Ontario (AMO) ] வருடாந்திர மாநாட்டின்போது, மாநகர மேயரின் தலைமையில் அனுப்பி வைக்கப்பட்ட குழுவானது சாலிசிட்டர் ஜெனரல் அவர்களுடன் நேரடி பேச்சு வார்த்தை நடத்தியது; இதில் பீல் பிராந்தியம் முழுக்கவுமாகவும், ப்ராம்ப்ட்டன் மாநகரிலும், சமுதாயப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான அணுகுமுறையை செயல்படுத்துவதற்காக, அரசின் அனைத்து மட்டங்களிலும் கூட்டு வைத்துக்கொள்வதற்கான பெருத்த அவசியம், ஈடுபாடு மற்றும் நிதி ஆதாரம் பற்றி பேசப்பட்டது.

நிதி பற்றிய இன்றைய அறிவிப்பில், ப்ராம்ப்ட்டன் சமுதாயத்தினருக்காக தற்போது இருக்கின்ற பாதுகாப்பு முயற்சிகளை மேலும் வலுப்படுத்துகின்ற பல கூட்டுப்பணிகளுக்கும் உதவி புரிவது பற்றி பாராட்டு தெரிவிக்கப்பட்டது, அவையாவன:

- இந்தப் பகுதியில் மக்களுக்கான கவனம் செலுத்துதலில் நகரின் எந்த ஒரு இடத்திலும் போலீஸார் இருப்பது, மற்றும் அதனை அதிகரிப்பதற்காக டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் சப்ஸ்டேஷன் (Downtown Brampton Substation) ஒன்றை திறக்கவிருப்பதாக பீல் பிராந்திய போலீஸ் (Peel Regional Police) சமீபத்தில் அறிவிப்பு செய்தது.

- சிட்டி ஆஃப் ப்ராம்ப்ட்டன்'ஸ் லைட்-ஹவுஸ் புரோகிராம் (City of Brampton's Lighthouse Program), - சமுதாயம் ஊடாக திடீரென நிகழும் அவசர நிலைகளில், இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்ற நிறுவன அமைப்புகளின் வளாகங்கள் உள்ளன; இவற்றின் பேரிலான நம்பிக்கையின் அடிப்படையில் இவற்றினுள்ளாக சமுதாயத்தினர் அடக்கலமாவதற்கு இது வழி வகுக்கிறது.
- கண்காணிக்கின்ற இயல்தன்மைகளை மேம்படுத்துமுகமாக, நெடுஞ்சாலைகள் 410 மற்றும் 403 ஆகியவற்றில் CCTV கேமிராக்களை நிறுவ வேண்டும் என்ற மாநகரின் அறிவுரை பற்றியும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது

**அறிஞர் மேற்கோள்கள்**

"சமூக விரோத கும்பல்கள் இன்ன இடம் என்று பார்ப்பதில்லை. இது GTA-முழுக்கவுமான பிரச்சனையாகும். எந்தப்பகுதிகளில் பதில் நடவடிக்கைக்கான குறைவான செவிசாய்ப்பு அதிகம் என்று நன்றாக அறிந்துகொள்ளவேண்டும்; இந்த வகையில், குற்றம் புரியும் கும்பல்களிடம் அதிநவீன வசதிகள் இருக்குமா இல்லையா என்பது பற்றி நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடலாகாது. துப்பாக்கி வைத்து அலைகின்ற சமூக விரோத கும்பல் பற்றிய நமது கவலையை பிரதமர் ஃபோர்ட் அவர்களும் சாலிசிட்டர் ஜோன்ஸ் அவர்களும் கவனம் கொடுத்து கேட்டனர் என்பதில் நான் மிகவும் நன்றி கடன் பட்டிருக்கிறேன். ப்ராம்ப்ட்டன் மற்றும் பீல் பிராந்தியத்தை பாதுகாப்பாக வைத்திருக்க இந்த நவீன வசதிகள் காவல்துறையிடம் இருக்க வேண்டிய முக்கிய விஷயமாகும்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் மாநகர் & உறுப்பினர், பீல் போலீஸ் சர்வீசஸ் போர்ட்* (*Peel Police Services Board*)

"பாதுகாப்பான தெருக்கள் இல்லாமல் ஒரு மிகப்பெரிய மாநகரத்தை உங்களால் உருவாக்க முடியாது. சமீபகாலத்தில் தலைதூக்கிய துப்பாக்கிக் கலாச்சாரம் மற்றும் வன்முறை வெறியாட்டம் ஒடுக்கப்பட்டு நிறுத்தப்பட வேண்டும். அரசின் அனைத்து மட்டங்களும் ஒன்றிணைந்து பணியாற்றினால் மட்டுமே இது சாத்தியம். நிதிஒதுக்கீட்டுக்கான இந்த அறிவிப்பானது, ப்ராம்ப்ட்டன் மாநகரை பாதுகாப்பாக வைத்திருக்க பீல் ரீஜனல் போலீஸ் (Peel Regional Police ) க்குத் தேவையான அனைத்து ஆதாரவசதிகளையும் பல காலத்திற்கு தரக்கூடியது."

- *சார்மைன் வில்லியம்ஸ், மாநகர கவுன்சிலர் &தலைவர், ப்ராம்ப்ட்டன் சமுதாய பாதுகாப்பு ஆலோசனைக் குழு*

BRAMPTON
Flower City
brampton.ca

media release

"இந்த முக்கியமான இந்த கால அவகாசத்திற்குள்ளாக நாங்கள் செய்கின்ற காரியம் ஒவ்வொன்றிலும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நிறைந்த ஒரு மாநகரத்தை உண்டாக்க வேண்டும் என்பதே இந்த மாமன்ற முன்னுரிமையாகும்; இதற்கான சரியான சூழலை உருவாக்கும் எண்ணமே எங்கள் மனதின் ஆழத்தில் இருக்கின்றது. நமது சமூகத்தை பாதுகாப்பாக வைப்பதற்காக எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், குடியிருப்புவாசிகள், இதில் பங்கேற்போர் மற்றும் முதலீட்டாளர்களின் மனதில் நம்பிக்கை ஊட்ட உதவும்; மேலும் நமது மாநகரத்தின் செழிப்பு மற்றும் வெற்றியை நீண்டகாலத்திற்கு தக்க வைப்பதற்கான வழியையும் வகுக்கும்.

- டேவிட் பேட்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca